2013 ஏப்ரல் 18]

257—

விளைபயிர்களைப் பாதுகாத்தல்

***21024—திரு. வீ.பி. நாகைமாலி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் விளைபயிர்களை எலிகளிடமிருந்து பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் ஆகிய காவேரி டெல்டா மாவட்டங்களில் விளை பயிர்களை எலிகளிடமிருந்து காப்பதற்கு எலி ஒழிப்பு முகாம்கள், கிராம இயக்க முகாம்கள், விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் ஆகிய டெல்டா மாவட்டங்களில் விளைபயிர்களை நாசப்படுத்தும் எலிகளிடமிருந்து பாதுகாக்க அரசிடம் ஏதாவது சிறப்புத் திட்டம் உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள்வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக விவசாயிகள் பயன்பெறும் வகையில் எலியை ஒட்டுமொத்தமாக ஒழிப்பதற்காக எலி ஒழிப்பு முகாம்கள் கோடைக் காலங்களிலே மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்கள் மூலமாக நடத்தப்பட்டு வருகின்றன. எலிகளை ஒழிப்பதற்கு எலி மருந்து, மானியத்தில் வழங்குதல் மற்றும்*

விவசாயிகளுக்கு எலி ஒழிப்பு பற்றிய பயிற்சி முகாம்கள் துறையால் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருச்சி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் எலி ஒழிப்பு முகாம்கள் நடத்த மாவட்டத்திற்கு ஒன்று என்று மூன்று வட்டாரங்கள் தேர்வு செய்யப்பட்டு, 30,000 ஹெக்டேர் பரப்பளவில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வீ.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய டெல்டா மாவட்டங்களில் நெல் சாகுபடி முக்கிய தொழிலாகும். இம்மாவட்டங்களின் கிராமப்புற பொருளாதாரம், நெல் சாகுபடியை மட்டுமே அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்த நிலையில் விவசாயம் செய்துள்ள நெற்பயிர்களை, எலிகள் புகுந்து நாசம் செய்துவிடுகின்றன. இதனால் விவசாயிகள் மிகவும் பாதிப்படைகின்றனர். விவசாயத்திற்கு காவேரியில் உரிய நீர் கிடைக்காமலும், தாங்க முடியாத விவசாய இடுபொருட்களின் விலையேற்றத்தாலும், இன்னும் பல நெருக்கடிகளாலும், சொல்ல முடியாத துன்பத்தில் உழன்று கொண்டிருக்கும் விவசாயிகள், தாங்கள் பயிர் செய்த நெற் பயிர்களை நாசப்படுத்தும் எலிகளை ஒழிக்க வழி தெரியாமல் விழி பிதுங்கி நிற்கின்றனர். எனவே, அரசு வேளாண்மைத் துறைமூலம், நெற் பயிர்களை நாசப்படுத்தும் எலிகளை ஒழிக்க, ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்கி, எலிகளிடமிருந்து டெல்டா மாவட்ட விவசாயிகளைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இதுகுறித்து ஒரு சிறப்பான திட்டத்தை அரசு உருவாக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2012-2013 ஆம் ஆண்டில் அனைத்து

2013 ஏப்ரல் 18]

மாவட்டங்களிலும் கிட்டத்தட்ட 15,296 எலி ஒழிப்பு முகாம்கள் நடைபெற்றிருக்கின்றன. கடந்த ஆண்டிலே புரோமோடயலின் மருந்து 16,948 கிலோ விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டிலே 16,995 வருவாய்க் கிராமங்களிலே 14-4-2013 முதல் உழவர் பெருவிழாக்கள்மூலமாக எலி ஒழிப்பு முகாம்கள்மூலம் பயிற்சியும் அளிக்கப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், நாகப்பட்டினம் மாவட்டத்திலே இதுவரை 467 முகாம்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. 534 கிலோ அளவிலே எலி மருந்து வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல், தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, 815 எலி ஒழிப்பு முகாம்கள் நடைபெற்றிருக்கின்றன. அதிலே 708 கிலோ அளவு மருந்து வழங்கப்பட்டிருக்கிறது. திருவாரூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 516 எலி ஒழிப்பு முகாம்கள் நடைபெற்றிருக்கின்றன. அதிலே 558 கிலோ மருந்து வழங்கப்பட்டிருக்கிறது. மீண்டும் உழவர் பெருவிழாக்கள் மூலமாக, இந்த எலி ஒழிப்பு பற்றிய சிறப்பு முகாம்களும் நடத்தவிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 258, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

258—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

புறவழிச் சாலை

***6564—திரு. மு. ரெத்தினசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, திருவையாறு முதல் கண்டியூர் வரை புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?